[2002 அக்டோபர் 30

### (ஈ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் 9 முதல் 14 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2002 ஆண்டு தமிழ்நாடு நபர் ஒருவரை உயிருடன் புதைக்கின்ற சடங்கு மற்றும் பழக்கத் தடைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.* *(இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*